செ.வெ.எண்:30 நாள்:28.10.2021

## பத்திரிக்கை செய்தி

தீபாவளி பண்டிகையையொட்டி வரும் நவம்பர் 1 ஆம் தேதி முதல் 3 ஆம் தேதி வரை காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை நியாயவிலைக்கடைகளை திறந்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள நியாயவிலைக்கடைகள் நவம்பர் 1, 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை தொடர்ந்து செயல்படும்.இந்நாட்களில் தீபாவளிக்கு முன்னதாக பொருட்கள் வாங்க விரும்புவோர் அனைவரும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் தொடர்புடைய நியாயவிலைக்கடைகளுக்கு சென்று பெற்றுக்கொள்ளலாம்.மேலும் தீபாவளிக்கு முன்னதாக பொருட்கள் வாங்காதவர்கள் வழக்கம்போல் பண்டிகை காலம் முடிந்து 07-11-2021 ஞாயிற்றுக்கிழமை முதல் பொருட்களை தொடர்புடைய நியாயவிலைக்கடைகளில் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் திரு.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.